**தங்காலை பிரதேச சபை - 2022**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தங்காலை பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, தங்காலை பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது சபை நிதியத்திலிருந்து சபையின் கட்டிடங்களை அபிவிருத்தி செய்வதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 1,864,914 இற்கான பெறுமதியை மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | 2023 ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் மூலம் சரி செய்யப்படும் என. | மூலதனச் செலவுகள் சரியாக மூலதனப்படுத்த வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது கூட்டுப் பெறுமதி ரூபா 130,450 தொகைக்கான 13 இருப்பு விடயங்கள் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் மற்றும் பொருத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2023 ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் மூலம் சரி செய்யப்படும் என. | இருப்பு விடயங்களை சரியாக இனங் கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய ரூபா 4,117,603 இற்கான நிலையான வைப்புக்களுக்கான வட்டி வருமானம் கணக்கீடு செய்திருக்கவில்லை. | 2023 ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் மூலம் சரி செய்யப்படும் என. | பெற வேண்டிய வருமானங்களை சரியாக இனங் கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய நிர்மாண வேலை கடன்பட்டோரின் பெறுமதி ரூபா 2,198,931 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2023 ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் மூலம் சரி செய்யப்படும் என. | கடன்பட்டோர் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டு இறுதி அளவில் செலுத்த வேண்டிய நிர்மாண வேலை | 2023 ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் மூலம் சரி | கடன்கொடுத்தோர் சரியாக கணக்கீடு |

| | | | |
|---|---|---|---|
| | கடன்கொடுத்தோரின் பெறுமதி ரூபா 1,198,931 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | செய்யப்படும் என. | செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு மீளளிப்புச் செய்யப்படாத ஊழியர் சம்பளச் செலவு ரூபா 3,623,741 தொகை பெற வேண்டிய மீதியொன்றென கணக்கீடு செய்திருக்கவில்லை. | 2023 ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் மூலம் சரி செய்யப்படும் என. | மீளளிப்புச் செய்யப்படாத செலவு பெற வேண்டிய மீதியொன்றென கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (எ) | முன்னைய ஆண்டின் போது மின்சார சபையுடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்படாமையால் மீளளிப்புச் செய்யப்படாத வீதி விளக்குப் பராமரிப்புக் கட்டணம் ரூபா 146,880 தொகை பெற வேண்டிய வருமானம் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2023 ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் மூலம் சரி செய்யப்படும் என. | உடன்படிக்கை மேற்கொள்ளப்படாத வருமானம் பெற வேண்டிய மீதியொன்றென கணக்கீடு செய்யக் கூடாது. |
| (ஏ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 151,500 தொகைக்காக செலுத்த வேண்டிய செலவுகள் கணக்கீடு செய்திருக்கவில்லை. | 2023 ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் மூலம் சரி செய்யப்படும் என. | செலவுக் கடன்கொடுத்தோர் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஐ) | 2020 ஆண்டு முதல் மீளாய்வாண்டு இறுதி வரை கிடைத்திருந்த ஒரே தடவையில் பெறும் பணம் ரூபா 666,667 தொகையின் வருமானத்திற்கு எடுக்காமல் வைப்பு ஒன்றென கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | முன்னைய ஆண்டுகளுக்கான ஒரே தடவையில் பெறும் பணத்தை வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | வருமானத்தை சரியாக இனங் கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஒ) | முன்னைய ஆண்டுகளிலிருந்து மீளாய்வாண்டு இறுதி வரை கிடைத்திருந்த நூலக அங்கத்துவக் கட்டணம் ரூபா 392,480 தொகையினை வருமானத்திற்கு எடுக்காமல் வைப்பு ஒன்றென கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2023 ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் மூலம் சரி செய்யப்படும் என. | வருமானத்தை சரியாக இனங் கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஓ) | மீளாய்வாண்டு இறுதியிலுள்ளவாறு பெற வேண்டிய ஊழியர் கடன் ரூபா 64,927 தொகை குறைவாக நிதிக் கூற்றுக்களில் குறைவாக காட்டப்பட்டுள்ளது. | மிகையாக அறவிடப்பட்ட தொகையினை திருப்பிச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | பெற வேண்டிய மீதி சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியிலுள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த 04 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகள் மற்றும் அதனொடு தொடர்புடைய துணைப் பதிவேடுகள் / அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே ரூபா 1,816,013 இற்கான வித்தியாசமொன்று காணப்பட்டது. | வித்தியாசத்தை இனங் கண்டு சரி செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | குறிப்பிட்ட மீதிகளின் வித்தியாசங்களை இணக்கஞ் செய்து கணக்குகளை சரி செய்ய வேண்டும். |

### 1.6.3 கணக்காய்வுக்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை | 2018 ஆண்டு முதல் இனங் காணப்பட்ட | நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு |

| | | |
|---|---|---|
| ரூபா 123,347,143 தொகைக்கான 05 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்ள முடியாதிருந்தது. | சொத்துக்களுக்கு மாத்திரம் அட்டவணை ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது எனவும், நிலையான வைப்புக்களுக்கான சான்றிதழ் ஒன்று காணப்படவில்லை என. | மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.7 இணங்காமை

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் பிரிவு 134(1) | சபையினால் இனங் காணப்பட்ட முன்னேற்றப்பட்ட பிரதேசங்களில் இருந்து வீதவரி அறவீடு செய்வதற்காக மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 1000 வீதவரி அலகுகள் இனங் காணப்பட்டதுடன், மீதியான வீதவரி ஆதனங்களையும் இனங் கண்டு பெறுமதி மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | அதிகாரச் சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதிக் கோவை விதி 218 | சபையின் காணிகள் மற்றும் கட்டிடங்கள் ஒவ்வொரு வருடத்திற்கு ஒரு முறை மதிப்பீட்டு சபை ஒன்றின் மூலம் பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. | கணிப்பீட்டு அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட்டு அறிக்கை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | விதிகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (இ) | மின் சக்தி மற்றும் வலுச் சக்தி அமைச்சுச் செயலாளரின் 2010 ஆகஸ்ட் 17 திகதிய பீஈ/01/01 இலக்கம் கொண்ட கடிதத்தின் பந்தி 06 | புதிய வீதி விளக்குகள் பொருத்தும் போது மின்சார சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ள வேண்டியிருந்த போதிலும் மின்சார சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாத 3221 வீதி விளக்குகளுக்காக அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அங்கீகாரம் இன்றிய வீதி விளக்குகளுக்காக அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என. | கடிதத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 25,507,935 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 64,617,857 தொகையாக இருந்தது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையி டப்பட்ட வருமானம் | சேகரிக்க ப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையி டப்பட்ட வருமானம் | சேகரிக்க ப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 775,000 | 1,139,984 | 1,343,406 | 829,075 | 6,020,000 | 1,433,484 | 877,946 | 1,032,497 |
| வாடகை | 9,318,730 | 10,158,765 | 11,691,071 | 1,740,742 | 7,780,700 | 7,603,305 | 5,914,359 | 3,273,048 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 6,735,000 | 3,871,426 | 3,925,401 | 530,525 | 2,561,000 | 1,945,691 | 2,393,629 | 584,500 |
| ஏனைய வரு மானங்கள் | 2,172,180 | 4,789,508 | 5,112,378 | 365,500 | - | 2,894,791 | 2,713,290 | 688,370 |
| | ------------ | ------------- | -------------- | -------------- | -------------- | -------------- | -------------- | -------------- |
| மொத்தம் | 19,000,910 | 19,959,683 | 22,072,256 | 3,465,842 | 16,361,700 | 13,877,271 | 11,899,224 | 5,578,415 |
| | ======== | ======== | ======== | ======== | ======== | ======== | ======== | ======== |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரித்தல் செயலாற்றல் தொடர்பாக அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 453 வியாபார அலகுகளில் இருந்து வியாபார வரி மற்றும் கைத்தொழில் வரி ரூபா 632,280 தொகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை வியாபார வரி அறவீடு செய்வதற்காக சட்ட நடவடிக்கை எடுக்க செயற்படபப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய ஏக்கர் வரி ரூபா 196,795 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கடிதங்கள் மூலம் ஏக்கர் வரி உரிமையாளருக்கு அறிவுருத்தப்பட்டுள்ளது என. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபைக்குச் சொந்தமான 53 கடையறைகளிலிருந்து பெற வேண்டிய கடை வாடகை ரூபா 1,131,868 தொகையினை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வருடாந்தம் வாடகைக்கு கொடுக்கப்படும் 04 ஆதனங்களிலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 608,874 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன், நிலுவை பெறுமதி அறவிடப்படாத கால வீச்சு 09 வருடங்களுக்கும் 11 இற்கும் இடைப்பட்டதாகும். | வாடகையாளர்கள் மற்றும் பிணையாளர்கள் இறந்துள்ளதால் நிலுவைத் தொகையை பெற்றுக்கொள்ள முடியாது என. | நிலுவை வருமானம் பொறுப்புச்சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களிடம் அறவீடு செய்ய வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 07 அறிவித்தல் பலகைகளிலிருந்து பெற வேண்டிய அறிவித்தல் பலகைக் கட்டணம் ரூபா 192,600 தொகை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்து பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் முறையே ரூபா 1,363,499 தொகை மற்றும் ரூபா 34,976,813 தொகையாக இருந்தது. | நிலுதைத் தொகையை பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவைத் தொகையை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வீதி விளக்குகள் பராமரிப்புத் தொடர்பாக தீர்வு வழங்குவதற்காக முறையான செய்முறையொன்று தயாரிக்கப்படாமையால் மீளாய்வு மற்றும் முன்னைய ஆண்டின் போது கிடைத்திருந்த 164 பொது மக்கள் முறைப்பாடுகளில் பரிசோதனை மேற்கொண்டவை 30 முறைப்படுகளாக காணப்பட்டதுடன், முறைப்பாடுகளை விசாரணை செய்தல் தொடர்பாக நிறுவப்பட்டுள்ள உள்ளகக் கட்டுப்பாடு பலவீன மட்டத்தில் காணப்பட்டது. | பொதுமக்களின் முறைப்பாட்டுப் பதிவேட்டை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | பொதுமக்கள் முறைபாடுகள் தாமதமின்றி விசாரணை மேற்கொள்ள வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது ரூபா 1,850,000 தொகை செலவிடப்பட்டு இரண்டு உடல் விருத்தி நிலையங்கள் உபகரணங்களுடன் நிறுவப்பட்ட போதிலும், அதனை பயன்படுத்தியிருக்கவில்லை. | விளையாட்டுக் கழகங்களின் அங்கத்தவர்கள் இந்த உடல் விருத்தி உபகரணங்களை பயன்படுத்துவதடன், தின வரவுப் பதிவேடொன்று பேணி வரும்படி, விளையாட்டுக் கழகங்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது என. | சொத்துக்கள் ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2019 செப்தம்பர் மாதத்தில் சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த ரன்ன மேற்கு கருத்தரங்கு மண்டபக் கட்டிடத்தின் கட்டம் 01 மற்றும் 02 இன் போது செலவிடப்பட்டிருந்த தொகை தொடர்பாக விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன், 03 கட்டத்தில் மாத்திரம் செலவிடப்பட்ட தொகை ரூபா 28,913,959 தொகையாக காணப்பட்ட போதிலும், மீளாய்வாண்டு இறுதி அளவிலும் கருத்தரங்கு மண்டபம் சபையினால் ஆக்கபூர்வமான கருமம் ஒன்றிற்கு ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. | நிச்சயிக்கப்பட்ட சாட்டுதல் ஒன்று மேற்கொள்ளும் வரை பிரதேச சபை நிதியத்தை பயன்படுத்தி பராமரிக்க முடியாமையால் நிச்சயிக்கப்பட்ட கருமத்திற்காக ஈடுபடுத்துதல் சிக்கல் தன்மையில் உள்ளது என. | உரித்தாக்கல் மேற்கொண்டு சொத்துக்களை ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | சபையினால் அனுபவிக்கப்படும் 47 காணிகள் மற்றும் மயானங்கள் மற்றும் 05 வாகனங்களின் சட்டரீதியான உரிமை சபைக்கு உரித்தாக்குவதற்கு மீளாய்வாண்டின் போது நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | காணிகள் மற்றும் மயானங்களை உரித்தாக்கித் தரும்படி பிரதேச செயலாளரிடம் விண்ணப்பித்துள்ளதுடன், வாகனங்களின் உரிமை மற்றும் வருமான அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொண்டு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சொத்துக்களின் சட்டரீதியான உரிமையை உரித்தாக்கப்பட வேண்டும். |

### 3.3 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| குடாவெல்ல சந்தைக் கட்டிடம் மற்றும் மறைப்பு வலை வேலி நிர்மாணிக்கும் நிர்மாண வேலையின் கீழ் PVC வலை வேலி நிர்மாணிப்பதற்காக ரூபா 162,676 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் வலை வேலி நிர்மாணிக்கும் போது வலை வேலியின் மீது பொருத்தப்பட வேண்டிய மில்லிமீற்றர் 20 x 6 அளவிலான தட்டை இரும்புத் தகடுகள் பொறுத்தப்பட்டிருக்காத போதிலும் முழுத் தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. | 20 x 6 அளவான தட்டை இரும்புத் தகடுகள் பொருத்தி வலை உறுதியாக பொருத்தும் படி ஒப்பந்த சங்கத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளன. | மதிப்பீட்டுக்கு இணங்க வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டும். |

### 3.4 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையின் 09 ஊழியர்கள் அங்கீகரிக்கப்பட்ட கடமைகளுக்கு புறம்பாக வேறு கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | கணக்காய்வு அவதானிப்பை ஏற்றுக்கொள்கின்றேன் என. | ஊழியர்களை அங்கீகரிக்கப்பட்ட கடமைகளில் ஈடுபடுத்த வேண்டும். |
| (ஆ) | 2005 ஆண்டின் போது சேவையை விட்டுச்சென்றிருந்த ஊழியர் ஒருவரிடம் பெற வேண்டிய விழா முற்பணம் மற்றும் இடர் கடன் வேண்டிய ரூபா 90,996 தொகை அறவீடு செய்வதற்கு மீளாய்வாண்டு இறுதி அளவிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அறவீடு செய்வதற்காக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை ஊழியர் கடனை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |